## மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கை கலந்தாய்வை

# ஒன்றிய அரசு நடத்த முடிவு- மாநில அரசின் உரிமையை பறிக்கும் செயல்!

## தினத்தந்தி நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை,ஜூன்.1-

மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கை கலந்தாய்வில் ஒன்றிய அரசு நடத்த முடிவு செய்வது மாநில அரசின் உரிமையைப் பறிக்கும் செயல் என்று தினத்தந்தி நாளேடு 31.5.2023 அன்று தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.


4 சென்னை 31-5-2023
தலையங்கம்
தினத்தந்தி
31.5.2023 (புதன்கிழமை)
மத்திய அரசாங்க கட்டுப்பாட்டில் மருத்துவ கலந்தாய்வா?

அத் தலையங்கம் வருமாறு:

பிளஸ்2 படிப்பில் அறிவியலை முதன்மை பாடமாகக்கொண்டு படித்த மாணவர்களின் உயர்படிப்பில் முதல் லட்சியம் மருத்துவ படிப்பாகவே இருக்கிறது. எம்.பி.பி.எஸ் மட்டுமல்லாமல் பல் மருத்துவம் போன்ற மருத்துவம் சார்ந்த படிப்புகளுக்கு மாணவர்கள் நீட் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலேயே மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. தமிழ்நாட்டில் இந்த ஆண்டு ஒரு லட்சத்து 30 ஆயிரம் மாணவர்களுக்கு மேல் நீட் தேர்வு எழுதியிருக்கிறார்கள். இந்த தேர்வின் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன் மருத்துவக்கல்லூரி மாணவர் சேர்க்கைக்கான கவுன்சிலிங், அதாவது கலந்தாய்வு நடக்கும்.

நீட் தேர்வில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்து வரிசைக்கிரமமாக மாணவர்களுக்கான கலந்தாய்வு தேதியை மருத்துவக்கல்வி இயக்குனரகம் பட்டியலிட்டு மாணவர்களுக்கு அறிவிக்கும். கலந்தாய்வுக்கு வரும் மாணவர்கள் கம்ப்யூட்டர் முன்னால் உட்கார்ந்து, எந்தெந்த கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டுக்கான இடம் இருக்கிறது? எந்தெந்த கல்லூரிகளில் நிர்வாக ஒதுக்கீட்டில் இடம் இருக்கிறது? என்பதை பார்த்து அவர்களுக்கு விருப்பப்பட்ட கல்லூரிகளை தேர்வு செய்துகொள்ளலாம். ஆக எந்த கல்லூரியில் படிக்கப்போகிறோம் என்பது மாணவர்களின் தேர்வாகத்தான் இருக்கிறது.

மொத்தத்தில் மாணவர் சேர்க்கையில் ஒரு வெளிப்படைத்தன்மை இருக்கிறது. தமிழ்நாட்டில் 36 அரசு மருத்துவக்கல்லூரிகளில் 5 ஆயிரத்து 50 இடங்களும், 19 தனியார் மருத்துவ கல்லூரிகளில் 3 ஆயிரத்து 50 இடங்களும், 20 தனியார் பல் மருத்துவக்கல்லூரிகளில் 1,950 இடங்களும் இருக்கின்றன. தனியார் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டு இடங்கள் போக நிர்வாக ஒதுக்கீட்டில் எம்.பி.பி.எஸ் படிப்பில் 1,310 இடங்களும், பி.டி.எஸ். படிப்பில் 740 இடங்களும் இருக்கின்றன. இதுதவிர மொத்த இடங்களில் 15 சதவீதம் அகில இந்திய ஒதுக்கீட்டுக்கு அனுப்பப்படுகிறது. அந்த இடங்களை மட்டுமே மத்திய அரசாங்கம் கலந்தாய்வு நடத்தி நிரப்பும். இதுதான் இவ்வளவு ஆண்டுகளாக இருக்கும் நடைமுறை.

இப்போது திடீரென்று மாநில அரசாங்கம் கலந்தாய்வு நடத்தும் உரிமையை பறிக்கும் வகையில் ஒரு முடிவை மத்திய அரசு எடுத்துள்ளது. அதன்படி, நாடு முழுவதும் உள்ள மருத்துவ கல்லூரிகளின் எம்.பி.பி.எஸ், பி.டி.எஸ். போன்ற இளநிலை மற்றும் எம்.டி, எம்.எஸ். போன்ற முதுகலை மருத்துவ படிப்புகளுக்கான 100 சதவீத இடங்களையும் பொது கலந்தாய்வு மூலம் மத்திய மருத்துவ கலந்தாய்வு குழுவே நடத்த மத்திய அரசாங்கம் முடிவு செய்து அனைத்து மாநில அரசுகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. இந்த பொது கலந்தாய்வில் அந்தந்த மாநில அரசுகளின் இடஒதுக்கீடு, உள்ஒதுக்கீடு நடைமுறை பின்பற்றப்படும் என்றும் மத்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாட்டில் இடஒதுக்கீடு வித்தியாசமானது. இங்கு 69 சதவீத இடஒதுக்கீடு பின்பற்றப்படுகிறது. இதில் அரசு பள்ளிக்கூடங்களில் படித்த மாணவர்களுக்கு 7.5 சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு இந்த புதிய முறையை ஏற்றுக்கொள்ளவில்லை. இதுகுறித்து தமிழ்நாடு அரசின் நிலைப்பாட்டை தெரிவிக்க ஒரு குழு, மத்திய சுகாதாரத்துறை மந்திரியை சந்திக்க இருக்கிறது. நமது மாநிலத்தில் உள்ள மருத்துவக்கல்லூரி மாணவர் சேர்க்கை தமிழ்நாடு அரசால் தான் நடத்தப்படவேண்டுமே தவிர, மத்திய அரசாங்கம் இதில் நுழைவதை தமிழ்நாடு அரசு மட்டுமல்லாமல் தமிழக மக்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மாநில அரசுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்க வேண்டுமே தவிர, இருக்கும் உரிமையை பறிப்பது ஏற்புடையதல்ல என்பதே பொதுவான கருத்தாக இருக்கிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, மேல்மாந்தை, கீழ விளாத்திகுளம் ஊராட்சி ஆண்டிரெட்டியாபுரம் ஓடை மற்றும் பிள்ளையார்நத்தம் ஊராட்சி கே.குமரெட்டையாபுரம் ஆகிய கிராமங்களில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து புதிதாக கட்டப்பட்டுள்ள பயணிகள் நிழற்குடை மற்றும் எட்டயாபுரம் 3வது வார்டு, எட்டயாபுரம் 5வது வார்டு ஆகிய பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டிடங்களை பயன்பாட்டிற்கு தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. திறந்து வைத்தார். உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான பெ.கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்கண்டேயன், மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, கூடுதல் ஆட்சியர் சுபம் தாக்கரே ஞானதேவ்ராவ், மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் ஜெயக்குமார், ஒன்றிய செயலாளர்கள் சின்ன மாரிமுத்து, மும்மூர்த்தி செல்வராஜ், இராதாகிருஷ்ணன், நவநீதகண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

## கழக மருத்துவர் அணி சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! கருத்தரங்குகள் - ஆய்வரங்கங்கள் - மாநாடுகள்!

## மருத்துவர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஜூன் 1-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது.

கழக மருத்துவ அணித் தலைவர் மருத்துவர் கனிமொழி என்.வி.என் சோமு எம்.பி அவர்கள் இக்கூட்டத்திற்கு தலைமையற்றார்.

கழக மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ அவர்கள் இக்கூட்டத்திற்கு முன்னிலை வகித்தார்.

மருத்துவ அணி மாநில துணைத் தலைவர்கள், இணைச் செயலாளர்கள் மற்றும் துணைச் செயலாளர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மாவட்டம் மற்றும் தொகுதி அளவிலான நிர்வாகிகளை நியமித்தல், மருத்துவ அணிக்கான உறுப்பினர் சேர்க்கையை விரிவுபடுத்துதல், கலைஞர் மருத்துவ மன்றம் உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

மேலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு கொண்டாட்டம், கழக அரசின் ஈராண்டு கால சாதனைகளுக்காக கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தல், இயக்க கொள்கைகளை தொடர் பரப்புரை மேற்கொண்டு வரும் கழக இளைஞரணி செயலாளருக்கு வாழ்த்து தெரிவித்தல் ஆகிய கீழ்காணும் மூன்று தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன அது வருமாறு:

நவீன தமிழ்நாட்டின் சிற்பி. தன் ஓயாத உழைப்பால், சிந்தனையால் தமிழ்நாட்டை சமூகப் பொருளாதார ரீதியாக உலக அளவிலான போட்டிக்கு நகர்த்தி, இந்திய அளவில் முதன்மை மாநிலமாக உயர்த்திய பெருந்தகை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தமிழ்நாட்டின் சுகாதார கட்டமைப்பை ஜனநாயகப்படுத்தி, எளிய மனிதர்களை, அனைத்து சமூக பின்புலங்களையும் கொண்ட மனிதர்களை மருத்துவர்களாக உயர்த்தி அழகு பார்த்தவர் அவர்.

உலகமே வியக்கும் வகையில் தமிழ்நாட்டின் சுகாதார கட்டமைப்பை மேம்படுத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

திராவிட இயக்கத்தின் மாபெரும் தலைவர், தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழை போற்றும் வகையில், அவரது நூற்றாண்டை கழக மருத்துவ அணி சார்பில் ஓராண்டு முழுவதும் கொண்டாடுவது என தீர்மானிக்கப்படுகிறது.

கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கருத்தரங்கங்கள், ஆய்வரங்கங்கள், மாநாடுகள் உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் முத்தமிழறிஞரின் புகழை போற்றுவது என கழக மருத்துவ அணி தீர்மானிக்கிறது.

மிகப்பெரிய வீழ்ச்சியிலிருந்து தமிழ்நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் சூழலை மீட்டு, வாக்குறுதிகளில் மிகப் பெரும் பகுதியை நிறைவேற்றி, சமூக நீதி, சமத்துவம், தொழில் வளர்ச்சி, ஒருங்கிணைந்த வளர்ச்சி, உட்கட்டமைப்பு மேம்பாடு, விளிம்பு நிலை மக்களை அதிகாரப்படுத்துதல், மொழியுரிமை, மாநிலத்தின் சுயமரியாதையை காப்பாற்றுதல் உள்ளிட்ட அனைத்து தளங்களிலும் தனிப்பெரும் முத்திரையை பதித்த, 'திராவிட மாடல்' அரசின் ஈராண்டு சாதனைகளை நினைத்து கழக மருத்துவ அணி பெருமிதம் கொள்கிறது.

தன்னிகரற்ற மக்கள் நல அரசை வழங்கி வரும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கழக மருத்துவ அணி நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது

திராவிட மாடல் கொள்கை விளக்க பயிற்சி பாசறைகள், கழக அரசின் ஈராண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டங்கள் என கழகத்தின் கொள்கைகளை துடிப்போடு, அடுத்த தலைமுறையிடம் எடுத்து செல்ல தொடர் முயற்சிகள் மேற்கொண்டு வரும், கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு திட்டங்கள் அமலாக்கத்துறை அமைச்சர் அவர்களை கழக மருத்துவ அணி பாராட்டி வாழ்த்து தெரிவிக்கிறது.

## காரைக்குடி நகராட்சியை

# மாநகராட்சியாக விரைவில் உயர்த்த வேண்டும்!

## அமைச்சர் கே. என். நேருவிடம் காரைக்குடி நகர்மன்றத் தலைவர் கோரிக்கை!

சிவகங்கை, ஜூன் 1 -

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் ரூபாய் 140கோடியே 13லட்சத்தில் நிறைவடைந்த பாதாளச் சாக் கடை திட்டப் பணிகளை துவக்கி வைப்பதற்காக நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே .என் நேரு இம்மாதம் 27ஆம் தேதி காரைக்குடி வருகை புரிந்தார். அமைச்சர் கே.என்.நேருவை காரைக்குடி நகர்மன்ற தலைவர் எஸ்.முத்துதுரை வரவேற்றுப் பேசுகையில் கொடுத்த கோரிக்கை மனுவில் கூறியுள்ளதாவது. காரைக்குடி நகராட்சியை மாநகராட்சியாக்கப்படும் என்று அறிவித்த தமிழக முதல்வர் நகர்ப்புற அமைச்சர் இதற்கு உறுதுணையாக இருந்த கூட்டுறவுத்துறை அமைச்சர் ஆகியோருக்கு காரைக்குடி நகர் மக்களின் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். விரைவில் அறிவிப்பு வெளியிடுமாறு காரைக்குடி மக்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் முதல்வர் பதவி ஏற்ற நாள் முதல் அமைச்சர் கே. என். நேருகூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் ஆகியோரின் ஆதரவில் காரைக்குடி மக்களின் குடிநீர் தேவை பூர்த்தி செய்ய ரூபாய் 18 கோடிக்கான திட்டமும் அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. கடந்த ஓராண்டில் மட்டும் ரூபாய் 24கோடியில் பணிகள் துவக்கப்பட்டு நிறைவு பெற்றுள்ளது. இது தவிர பொது நிதியிலிருந்து ரூபாய் 8கோடியில் பல்வேறு பணிகள் நிறைவடைந்துள்ளது. நகராட்சி பள்ளிகள் அனைத்திலும் உள்கட்டமைப்பு வசதிகள் புதிய வகுப்பறை கட்டிடங்கள் ரூபாய் 22கோடியில் கட்டப்பட்டுள்ளது.

இதுவரை ஓராண்டில் நமது முதல்வர் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் காரைக்குடி நகராட்சியில் மட்டும் ரூபாய் 54 கோடியில் மக்கள் வளர்ச்சி திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவடைந் துள்ளது. மேலும் குடிநீர் திட்ட பணிக்காக ரூபாய் 3 கோடியே30 லட்சம் வாரச்சந்தை மேம்பாட்டிற்காக ரூபாய் 7 கோடி பழைய பேருந்துநிலையத்தில் வணிக வளாகம் கட்ட ரூபாய் 6 கோடி, எனமொத்தம் ரூபாய் 16 கோடியே 30லட்சத்திற்கான திட்டப்பணிகள் மேற்கொள்ள அரசின் பரிசீலனையில் உள்ளது. இதுதவிர சாலை விரிவாக்க த்திற்காக ரூபாய் ரூபாய் 9 கோடி,மழைநீர் வடிகால் மற்றும் சிறுபா லங்கள் அமைக்க ரூபாய் 7கோடி, திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு ரூபாய் 4 கோடி ஆக மொத்தம் ரூபாய்20 கோடிக்கான திட்டமதிப் பீடு தயார் செய்து அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதனை விரைவாக அமைச்சர் அவர்கள் நிறைவேற்றி தருமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு நகர்மன்றத் தலைவர் வரவேற்றுப் பேசி கோரிக்கை வைத்தார்.

# திருச்சி தெற்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!



திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.கழகக் கூட்டம் இன்று (01/06/2023-வியாழன்) மாலை 5 மணி அளவில் மாவட்ட கழக அவைத்தலைவர் என்.கோவிந்தராஜ் தலைமையில் மாவட்ட தி.மு.கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் முத்தமிழ் அறிஞர், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுவதும் அவரது புகழுக்கு மென்மேலும் மாண்பு சேர்க்கும் வகையில் சிறப்பாகக் கொண்டாடுவது குறித்தும், மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது.

கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைக் கழகத்தால் தற்போது வரை அறிவிக்கப்பட்டுள்ள அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மற்றும் சிறப்பு அழைப்பாளர்களாக உள்ளாட்சி அமைப்புகளின் துணை மேயர், மண்டல தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய, பேரூராட்சி பெருந்தலைவர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

அமைச்சர் **அன்பில் மகேஸ் பொய்யாமொழி**,
செயலாளர், திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

# 132 'அ' வட்ட கழக நிர்வாகிகள் கூட்டம்!

## வட்ட கழக செயலாளர் கே.எஸ் வெல்டிங் ராஜா வேண்டுகோள்!

சென்னை, ஜூன் 1

சென்னை தென் மேற்கு மாவட்ட தியாகராயர் நகர் மேற்கு பகுதி 132 'அ' வட்ட கழக நிர்வாகிகள் கூட்டம் 12/29, சக்கரபாணி தெரு விரிவில் உள்ள மாமன்ற அலுவலக வளாகத்தில் இன்று (1.6.2023 -வியாழக்கிழமை) மாலை 6 மணி அளவில் அவைத்தலைவர். சுப.எம்.முருகன் தலைமையில், தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் சென்னை தென் மேற்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் எடுக்கப்பட்டதீர்மானத்தின் அடிப்படையில் தியாகராய நகர் கிழக்கு பகுதி கழக செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., தியாகராய நகர் மேற்கு பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., கே.எஸ்.வெல்டிங் மணி வட்டக் கழகச் செயலாளர் கே.எஸ் வெல்டிங் ராஜா, மாமன்ற உறுப்பினர் திருமதி.பா. கார்த்திகாபாஸ்கர் ஆகியோர் முன்னிலையில், ஜூன் 3 முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 100 வது பிறந்த நாள் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவது மற்றும் புதிய உறுப்பினர் சேர்க்கை குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் 132 அ வட்டத்திற்குட்பட்ட மாவட்ட செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், இளைஞர் அணி மகளிர் அணி, வழக்கறிஞர் அணி ஆதிதிராவிடர் அணி, இலக்கிய அணி, மாணவர் அணி, வர்த்தகர் அணி, தொண்டரணி, சிறுபான்மையினர் அணி, பொறியாளர் அணி தகவல் தொழில் நுட்ப அணி. பாக முகவர்கள் அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், தொ.மு.ச தொழிற்சங்கம் கழக முன்னாள் இந்நாள் முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வெல்டிங்ராஜா கேட்டுக் கொண்டுள்ளார்.


**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்**
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | மே.பொ/கொ&நி/வ.செ.அ.மி.நி-I | CE-37, CE-40 | 2 |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும், திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணைய தளங்களை காணவும். **www.tangedco.gov.in, www.tntenders.gov.in/nicgep/app, www.tenders.tn.gov.in**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்." செ.ம.தொ.இ/2808/ஒப்பந்தப்புள்ளி/2023


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# மு. சண்முகம்

## ஜூன் 1 (1987)



தந்தை பெரியாரின் நம்பிக்கைக்குரிய தொண்டராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, பேரறிஞர் அண்ணாவின் கவனத்தைக் கவர்ந்து அவரது இதயத்திலும் தனக்கென ஒரு இடத்தை பிடித்துக் கொண்டவர்.

கழகம் துவங்கிய காலத்திலிருந்து தலைமைக் கழகத்தில் பொறுப்பாளராக பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரிடம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

'நம்நாடு' திங்கள் இதழாக வெளிவந்தபோதும், 'கழகக் குரல்' வார இதழிலும், 'தோழன்' என்ற புனைப்பெயரில் இவர் எழுதிய கட்டுரைகள் ஏராளம்.

1976ல் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, மிசா காலத்தில் சோதனை ஏற்பட்டபோதுதான் 'தோழன்' என்ற பெயர் அவருக்கு எவ்வளவு பொருத்தம் என்பது புரிந்தது என தலைவர் கலைஞர் கூறியுள்ளார். மேலும், தனது இரங்கல் உரையில் "கழகத்தின் வரலாற்றுக் குறிப்புப் புத்தகம் – எழுதப்படாத புத்தகம் சண்முகம்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2023–2024ஆம் ஆண்டிற்கான உறுதிமொழி குழு தலைவர், சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன் (பண்ருட்டி) தலைமையில் சட்டமன்றகுழு உறுப்பினர்கள் கருணாநிதி(பல்லாவரம்), ரூபி ஆர்.மனோகரன் (நாங்குனேரி), எம்.கே. மோகன்(அண்ணா நகர்), பி.ராமலிங்கம்(நாமக்கல்), எஸ்.ஜெயக்குமார்(பெருந்துறை) ஆகியோர் மதுரை மாநகராட்சியின் மூலம் அம்ருத் திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ஏற்கனவே இரண்டு கட்டங்களாக பணிகள் நடைபெற்று, தற்போது எஞ்சியுள்ள 57 வார்டுகளிலும் குடிநீர் விநியோக இணைப்புகள் வழங்க மூன்றாம் கட்டமாக நடைபெற்று வரும் குழாய் பதிக்கும் பணிகளை நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள.சங்கீதா,மாநகராட்சி ஆணையர் சிம்ரன்ஜீத் சிங் உள்ளிட்டோர் உள்ளனர்


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம் - 11**

ம.அ.11.ந.க.எண்.இ3/2132/2023

**குறுகிய மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

மண்டல அலுவலர் - 11 அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

மண்டலம்-11-ல் உள்ள 48 பூங்காக்களில் துப்புரவு பணியாளர், தோட்டக்காரர், காவலாளி, மேற்பார்வையாளர் கொண்டு பூங்காவினை ஒரு வருட காலத்திற்கு இயக்கி பராமரித்தல் மற்றும் சுத்தம் செய்யும் பணிகள் (3 ஒப்பந்தப்புள்ளிகள்)

பணியின் உத்தேச தொகை : குறைந்தபட்சம் **ரூ.43.26 லட்சம், அதிகபட்சம் ரூ. 128.14 லட்சம்**
முன்வைப்பு தொகை : மொத்த பணியின் உத்தேச தொகையில் **1%**
ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **08.06.2023 அன்று மாலை 3.00 மணி வரை**
ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **09.06.2023 அன்று மாலை 3.30 மணி**
மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2814 / ஒப்பந்தப்புள்ளி / 2023
**மண்டல அலுவலர் – 11**
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

**கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர் (SWD/Mech) அவர்களால் குறுகிய கால மறு மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது**

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/1040A/2022**
**8 எண்ணிக்கையில் 4 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட இயந்திர பெருக்கி வாகனங்கள் 7 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்தல்**
**முன்வைப்பு தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி**
**ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம், 16.06.2023 பிற்பகல் 3.00, மணி**
**ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் 19.06.2023 பிற்பகல் 3.30 மணி**
**மேலும் விவரங்களுக்கு : http://tntenders.gov.in இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.**

செ.ம.தொ.இ / 2813 / ஒப்பந்தப்புள்ளி / 2023
**மேற்பார்வை பொறியாளர் (இ/ம.நீ.வ.)**
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்